காலிங்கராயன் மணி மண்டபத்தை திறந்து வைத்து அவரது சிலைக்கு முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி வணங்கிய போது எடுத்த படம். அருகில் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், கே.சி.கருப்பணன், அன்பழகன் ஆகியோர் உள்ளனர்.

காலிங்கராயன் விழா ஆண்டுதோறும் அரசு சார்பில் கொண்டாடப்படும்

முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

ஈரோடு, மே.14-

காலிங்கராயன் விழா ஆண்டுதோறும் அரசு சார்பில் கொண்டாடப்படும் என்று முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

காலிங்கராயன் வாய்க்கால்

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாளையம் முதல் கொடுமுடி அருகே உள்ள ஆவுடையார்பாறை வரை 56½ மைல் தூரம் பாய்ந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்கு பாசனம் அளித்து வருகிறது காலிங்கராயன் வாய்க்கால். இந்த வாய்க்கால் கி.பி.1270-ம் ஆண்டு வெட்ட தொடங்கப்பட்டு 1282-ம் ஆண்டு பாசனத்துக்கு திறக்கப்பட்டது.

கொங்கு மண்டல பகுதியின் சிற்றரசர் பொறுப்பில் இருந்த காலிங்கராயன் அவருடைய சொந்த முயற்சியால் 12 ஆண்டுகள் தவம்போல் அணை கட்டி வாய்க்கால் வெட்டும் பணியை முடித்தார். 736 ஆண்டுகளுக்கு முன்பு பவானி ஆற்றையும், நொய்யல் ஆற்றையும் இணைக்கும் வகையில் வெட்டப்பட்ட காலிங்கராயன் வாய்க்கால் நதிகள் இணைப்பின் முன்னோடி திட்டமாக கருதப்படுகிறது. தொழில்நுட்பம் எதுவும் இல்லாத அந்த காலத்திலேயே மிகவும் சிறப்பாக வாய்க்கால் வெட்டி வறட்சியாக இருந்த பகுதிகளை வளம் கொழிக்க வைத்தவர் காலிங்கராயன். இன்றும் அவருடைய பெயரால் வாய்க்கால் பாசனம் தரும் முக்கிய வாய்க்காலாக உள்ளது.

மணிமண்டபம்

இந்த வாய்க்கால் பாசனத்துக்காக திறக்கப்பட்டது 1282-ம் ஆண்டு தை மாதம் 5-ந்தேதியாகும். இந்த நாளை காலிங்கராயன் விழாவாக கொண்டாட வேண்டும் என்று ஈரோடு காலிங்கராயன் பாசன பகுதி விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும், காலிங்கராயன் அணைக்கட்டு அமைந்திருக்கும் பகுதியான பவானி அருகே உள்ள காலிங்கராயன் பாளையத்தில் மணிமண்டபம் கட்டவும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்தநிலையில் முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2016-ம் ஆண்டு காலிங்கராயன் மணிமண்டபம் மற்றும் வெண்கல சிலை அமைக்க உத்தரவிட்டு நிதி ஒதுக்கீடு செய்தார். அதன்படி தமிழ்நாடு பொதுப்பணித்துறை சார்பில் ரூ.1 கோடியே 55 லட்சம் செலவில் அழகிய மணிமண்டபம் மற்றும் 7 அடி உயரம் உள்ள காலிங்கராயன் வெண்கல சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இதன் திறப்பு விழா நேற்று மாலை நடைபெற்றது.

முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்

விழாவில் தமிழக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு புதிய மண்டபத்தை திறந்து வைத்தார். அவர் ரிமோட்டை இயக்கி காலிங்கராயன் முழு உருவ சிலையை திறந்து வைத்தார். பின்னர் அவர் காலிங்கராயன் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த விழாவில் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், கே.சி.கருப்பணன், செல்லூர் ராஜூ, டாக்டர் சரோஜா, பி.தங்கமணி, கே.பி.அன்பழகன் ஆகியோரும் கலந்து கொண்டு காலிங்கராயன் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

ஈரோடு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர், மாவட்ட வருவாய் அதிகாரி கவிதா, ஆர்.டி.ஓ. நர்மதாதேவி, தாசில்தார் அமுதா, காலிங்கராயன் வாரிசுதாரர்கள் ஏ.எம்.ஆர்.அருண்குமார், சித்தார்தன் எம்.ஆர்.காலிங்கராயன், விஷ்ணு காலிங்கராயன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அரசு விழா

பின்னர் பவானி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளிக்கூடத்தில் நடந்த விழாவில் பேசிய முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறும்போது "வரலாற்று சிறப்புமிக்க காலிங்கராயனுக்கு நினைவு மணிமண்டபம் அமைக்க முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா நிதி ஒதுக்கீடு செய்தார். இப்போது அந்த பணிகள் நிறைவடைந்து அவரது ஆசிகளுடன் காலிங்கராயன் வாரிசுகளின் ஒப்புதலுடன் மணிமண்டபம் திறக்கப்பட்டு உள்ளது. காலிங்கராயன் விழா இனிமேல் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்", என்றார்.

மதுக்கடை பாரில் உள்ள பொருட்களை பொதுமக்கள் அ

சென்னை சேலையூர் அ

புதிதாக திறக்கப்பட்ட மது அடித்து நொறுக்கிய பொ

சென்னை, மே.14-

சென்னை சேலையூர் அருகே புதிதாக திறக்கப்பட்ட மதுக்கடையை பொதுமக்கள் அடித்து நொறுக்கினார்கள்.

பெண்களிடம் வம்பு

சென்னையை அடுத்த சேலையூர் அருகே உள்ள மப்பேடு குடியிருப்பு பகுதிக்கு மத்தியில் 10 நாட்களுக்கு முன் புதிதாக டாஸ்மாக் மதுக்கடை திறக்கப்பட்டது.

இப்புதிய மதுபான பாரில் குடிக்க வருபவர்கள் அருகில் உள்ள வீடுகளில் தனியாக இருக்கும் பெண்களிடம் வம்பு செய்வது, வீடுகளில் உள்ள பொருட்களை திருடிச்செல்வது போன்ற செயல்களில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த மதுக்கடையை மூட வேண்டும் என அப்பகுதியினர் கடந்த வாரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போலீசார் தங்களிடம் மதுக்கடை அமைக்க அனுமதி எதுவும் வாங்கவில்லை என்றும், வருவாய் துறையிடமிருந்து தகவல் தெரிவித்து கடையை மூட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்